

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி , லக்காபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்ட வரும் கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை வீட்டுவசதி மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி பார்வையிட்டார். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், முதன்மை கல்வி அலுவலர் மான்விழி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், கற்பகவிநாயகா திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் மு.அருணா தலைமையில், மகளிர்க்கு உரிமைத் தொகைக்கான வங்கி பற்று அட்டைகளை வழங்கினார்கள். உடன் முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வக்கோட்டை), மற்றும் அரு.வீரமணி, வே.ராஜேஸ் , பூங்குடி எம்.சிவா, தெய்வானை, அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### அமைதிப் பூங்காவான தமிழ்நாட்டை "கலவர பூமியாக்கத்" திட்டமிட்டால்,

# பின்னங்கால் பிடரியில் பட ஓட ஓட பா.ஜ.க.வை விரட்டியடிப்போம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, டிச. 15–

உள்ளூர் மக்கள் எதிர்ப்பையும் மீறி, வழமையாகச் சங் பரிவார் கூறும் ஆகம முறைகளையும் புறந்தள்ளி, திருப்பரங் குன்றத்தில் தீபம் ஏற்றும் பிரச்சி னையைக் கையில் எடுத்துக்கொண்டு, ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி., வழக்கமாகக் கடைப்பிடிக்கும் மதக் கலவரத்தைத் தூண்டி, அமைதிப் பூங்காவாக இருக்கும் தமிழ் மண்ணைக் கலவரப் பூமியாக மாற்ற எண்ணினால், பெரியார் மண்ணான தமிழ்நாடு அத்தகையவர்களைப் பின்னங்கால் பிடரியில் அடிபட ஓட ஓட விரட்டியடிப்போம் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

திருப்பரங்குன்றம் பிரச்சினைக்காகத் தேசிய அளவில் போராட்டம் நடத்துவது குறித்து, தமிழ்நாட்டில் உள்ள ஆர்.எஸ்.எஸ். நிர்வாகிகளுடன், அதன் தேசியத் தலைவர் மோகன் பாகவத், தமிழ்நாட்டிற்கு ஆர்.எஸ்.எஸ். நூற்றாண்டு விழா நிகழ்ச்சிக்கு வந்து கலந்து முடிவெடுப்பதாக இரண்டு நாள்களுக்கு முன்பு (11.12.2025) திருச்சியில் ஓர் அறிவிப்புத் தந்துள்ளார்! சூட்சுமம் புரிகிறதா?

**ஆர்.எஸ்.எஸ். தலைவரின் பேச்சு உள்நோக்கம் கொண்டதே!**

தந்திரம், சூழ்ச்சி, எதிலும் உள்ளொன்று வைத்து புறமொன்று கூறுவதையே தமது வாடிக்கையாகக் கொண்டுள்ள ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர், திருச்சி கூட்டத்தில் பேசும்போது, "திருப்பரங்குன்றம் பிரச்சினையில், 'ஹிந்து அமைப்புகள், ஆர்.எஸ்.எஸ். உதவியை நாடினால், பரிசீலிப்போம்" என்று, ஏதோ இதுவரை திருப்பரங்குன்றத்தில் மதவாத உணர்வை சில ஆண்டுகளாகக் கிளப்ப முயற்சிப்பதற்கும், ஆர்.எஸ்.எஸ்.சுக்கும் எந்த சம்பந்தமும் இல்லாதது போலவும், "ஹிந்து முன்னணியினரோ அல்லது பா.ஜ.க.வினரோ மட்டும் நடத்தினார்கள்; எங்களுக்கும், அதற்கும் சம்பந்தமில்லை.

இனி நீங்கள் அழைத்தால், இதை "மூலதனமாக்கி" மற்றொரு அயோத்தி – பாபர் மசூதிபோல, மதக் கலவரம், வெறுப்புப் பிரச்சினையைத் தொடங்குவோம்" என்பது போலவும் உரைப் பாயிரம் பாடக் கிளம்பியுள்ளார்கள்.

இதன் முக்கிய நோக்கம், அதன் நூற்றாண்டை மக்கள் இயக்கமாகக் கொண்டாட முடியாத நிலையில், ஆர்.எஸ்.எஸ்.சின் அரசியல் பிரிவான பி.ஜே.பி. தலைமையுடன் உள்ளுக்குள் ஒரு பனிப்போர் கடந்த சில ஆண்டுகளாகவே நடந்து வருவது ஒருபுறம் என்றாலும், அதையும் தாண்டி, கலவரத்தை உருவாக்கி, தங்கள் நூற்றாண்டைக் கொண்டாட நினைக்கிறார்களா?

**திருப்பரங்குன்றம் உள்ளூர் மக்களின் கருத்தென்ன?**

தமிழ்நாட்டில் உள்ள திருப்பரங்குன்றத்தில் விளக்கு ஏற்றுவதை ஒரு "பிரச்சினையாக்குவது" யார்? அவ்வூரில் வாழும் மதத்தவர்களா? இல்லையே! 'வேலை போன' அண்ணாமலைகள் ஆர்ப்பாட்டம் நடத்தி, தனது கட்சியை வளர்ப்பதும், தி.மு.க. ஆட்சியின் மீது உண்மையில்லாத 'சட்டம் – ஒழுங்கின்மை' என்ற ஒரு போலிக் குற்றச்சாட்டைக் கூறி, ஊடக வெளிச்சத்தைப் பெற முயன்று தோற்றவர்கள், மல்லு கட்டிப் பார்க்கிறார்கள்.

"ஒற்றுமையாக – மத நல்லிக்கத்துடன் ஒன்றுபட்டு, அண்ணன் – தம்பிகளாய், 'மாமன் – மச்சான்களாக' உள்ள எங்களை வைத்து, ஏன் அரசியல் செய்கிறீர்கள்?'' என்று செவுளில் அறைவது போல் உள்ளூர் மக்கள் கேட்டது, இவர்களுக்கு ஏனோ வசதியாக மறந்து விட்டது!

பக்திப் போர்வையில், பா.ஜ.க. – ஆர்.எஸ்.எஸ். தங்களை வளர்த்துக் கொள்ள வெளியூர் ஆட்களைக் கொண்டுவந்து இறக்கி, கலவரம் செய்ய முயன்றார்கள்!

**சிவ ரூபத்தில் ருத்திராட்சப் பூனைகள்!**

"சிவ ரூபத்தில் உள்ள ருத்திராட்சப் பூனைகள்" அண்மைக்காலத்தில், இதற்கு ஆதரவாக நீதித்துறையில் உள்ள மதவாத வெறியர்களான சில நீதிபதிகள் – குறிப்பாக நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் போன்றவர்களும் துணை நிற்பது,அவர்களது கடமை தவறிய, (அரசியலமைப்புச் சட்டத்தின்மீது) எடுத்த பதவிப் பிரமாணத்திற்கு எதிரான ஒன்று என்பதை மதச் சார்பற்ற அனைத்து முற்போக்குச் சக்திகளும், அமைப்புகளும் தமிழ்நாட்டில் பகிரங்கமாகவே எழுதியும், பேசியும் வரும் நிலை ஏற்பட்டு விட்டது!

"ஆகமத்தை மீறலாமா?" என்று வழக்கமாகக் கேட்கும் ஆரியத் திருக்கூட்டம், இப்போது அதே கேள்வியை சமயக் கோயில்களின் பராமரிப்புப் பொறுப்பினைச் சட்டப்படி ஏற்றுச் செயல்படும் இந்து அறநிலையத் துறையும், தமிழ்நாடு அரசும் கேட்டால், பதில் இல்லை.

**எல்லைத் தூண், தீபத் தூணா?**

அந்தக் கோயிலில் வழக்கமாக விளக்கு எங்கு ஏற்றவேண்டுமோ, அங்கு அவர்களது வழமைப்படி நடக்கும், இப்போது தர்கா அருகில் உள்ள ஓர் எல்லைத் தூணை, 'தீபத் தூண்' என்று இல்லாத ஒன்றை, அயோத்தி போல தொடங்கி, அதற்கு நீதிமன்றத்தையும் சாய்ந்த நீதித் தராசு போல செய்ய முன்வர வேண்டுமா என்பதே பொது நிலையா ளர்களின் நியாயமான கேள்விகளாகும்!

இந்நிலையில், நாடாளுமன்றத்தில், பேரவைத் தலைவரிடம், இந்தியா கூட்டணி எம்.பி.,க்கள் உள்பட 120 எம்.பி.,க்கள் கையொப்பமிட்டு, நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன்மீது "இம்பீச்மெண்ட்" மனு கொடுத்தனர். பிறகு குடியரசுத் தலைவரிடமும் மனு கொடுத்துள்ளனர்.

**முன்னணியில் இருக்கும் தமிழ்நாடு!**

அந்தக் குறிப்பிட்ட குற்றச்சாட்டிற்கு ஆளான நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்களுக்கு ஆதரவாக, ஒரு தலைப்பட்சமாக உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசுவது, அரசியலமைப்புச் சட்டத்திற்கும், நாடாளுமன்ற மரபுக்கும் எதிரான கூற்று அல்லவா?

இந்நிலையில், தமிழ்நாடு தி.மு.க. அரசிற்கு, தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகவும், வளர்ச்சிப் பாதையில், ஆயிரம் தடைகள், முட்டுக்கட்டைகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு ஏற்படுத்தியதையும் மீறி, ரிசர்வ் வங்கியே அதன் அறிக்கையின்படி, மற்ற முன்னேறிய மாநிலங்களைவிட, 'டபுள் என்ஜின்கள்'' என்று தற்பெருமை பேசும் மாநிலங்களைவிட, மிகச் சிறப்பான வகையில், "தடைக்கற்கள் உண்டென்றாலும், தாண்டும் – தாங்கும் தடந்தோள்கள் எங்களுடையது" என்று உலகுக்கே காட்டும் வண்ணம், பொருளாதாரத்திலும் அசைக்க முடியாத கற்பாறை போல, மக்களின் பேராதரவுடன் நாளும் ஜொலிக்கிறது!

**அமைதிப் பூங்காவான தமிழ்நாட்டை அமளியாக்கத் திட்டமா?**

இதற்கு எதிராக, அந்த வளர்ச்சியைத் தடுக்க, ஒடுக்க கடைசி வழிகள் இரண்டு.

1. எஸ்.அய்.ஆர்.மூலம் வாக்காளர்கள் பட்டியலிருந்து பல லட்சம் பேரை நீக்குவது?

2. அமைதிப் பூங்காவான தமிழ்நாட்டில், மதக்கலவரங்களை ஏற்படுத்திடத் திட்டமிடுதல் என்பதற்கு, ஆதரவுத் தரத்தான் ஆர்.எஸ்.எஸ். தலைவரின் தூண்டுதல் பேச்சு!

இதற்கு எதிராக, சீறும் புயலாக, ஒன்றுபட்டு, "அமைதிப்பூங்காவான – பெரியார் மண்ணான தமிழ்நாட்டில் மதக்கலவரத்தை ஏற்படுத்தி அமளிக்காடாக்க ஒருபோதும் அனுமதியோம்'' என்ற உணர்வுடன், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் – இயக்கங்கள் மட்டுமல்ல – அமைதியை விரும்பும் அனைவரும் இதில் ஒன்றுபட்டு, "மதவெறியை மாய்ப்போம் – மனிதநேயத்தை – சகோதரத்துவத்தை காப்பாற்றுவோம்" என்று முழங்கி, கலவரத் தீவட்டிகளை விரட்டி, தந்தை பெரியாரின் சமத்துவ அறிவுச் சுடரை ஓங்கிப் பிடிப்போம்!

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் கூறியது என்ன?**

இப்போது, பக்திக்கும்,

விஷப் பாம்பிற்கும் – நாத்திகத்திற்கும் போட்டியில்லை!

முன்பு 1971 தேர்தலில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், மக்களுக்குத் தந்த அந்த அறிவுரை, வேண்டுகோள் – அறிவுத் தெளிவு இப்போதும் தேவை!

**"இன்று 'ஆஸ்திகம்' என்பது உயர்ஜாதியினரின் நலம்.**

**இன்று 'நாஸ்திகம்' என்பது பெருவாரியான தமிழ் மக்களின் நலன்.**

**உங்களுக்கு இதில் எது வேண்டும்?''**

**'விடுதலை', 18.02.1971**

களம் காண ஆயத்தமாகுங்கள்!

இந்த மண்ணைக் காவிகள், கலவர பூமியாக்க ஒருபோதும் இடந்தராது, பின்னங்கால் பிடரியில் பட, ஓட ஓட விரட்டி அடிப்போம் – அணி வகுத்துப் பணி முடிப்போம்! அமைதிப் பூங்காவான தமிழ்நாட்டைக் காப்போம், காப்போம்! வாரீர்! வாரீர்!!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



சிவகாசி சட்டமன்றதொகுதி தி.மு.க. வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் சிவகாசி அருகே திருத்தங்கல்லில் நடைபெற்றது . மாநகர செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன் தலைமை வகித்து பேசினார். மேயர் சங்கீதா இன்பம் , சிவகாசி ஒன்றிய செயலாளரும் முன்னாள் யூனியன் துணைத் தலைவருமான விவேகன்ராஜ், கிழக்கு ஒன்றியச் செயலாளர் கோபிக்கண்ணன் முன்னிலை வகித்தனர் . பகுதி கழக செயலாளர்கள் அ.செல்வம் , காளிராஜன் , கருணாநி திபாண்டியன் , மாரீஸ்வ ரன் , அப்துல்முத்தலிப் , மாநகராட்சி மண்டலக் குழு தலைவர் குருசாமி வரவேற்று பேசினர். இதில் தொகுதி பொறுப்பாளர் செண்பகவிநாயகம் கலந்து கொண்டு பேசினார் . கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் எம்.ஏ.சந்திரன் , அதிவீரன் பட்டி செல்வம் , மாவட்ட துணை செயலாளர் ராமமூர்த்தி , விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சரவணகுமார், திருத்தங்கல் முன்னாள் நகர்மன்றதுணைத் தலைவர் பொன்சக்திவேல் , மாநகர பொருளாளர் வெள்ளத்துரைபாண்டியன் , வட்டக் கழகச் செயலாளர்கள் , சிவகாசி ஒன்றிய கழக நிர்வாகிகள் , மாநகர கழக நிர்வாகிகள் , பூத்கமிட்டி பொறுப்பாளர்கள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் என 500 க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்ட ஏற்பாடுகளை சிவகாசி சட்டமன்ற தொகுதி நிர்வாகிகள் செய்திருந்தனர் .

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் சாதனையாளர் விருது வழங்கும் விழா!

## விருதுகளை வழங்கி அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரை!



திருச்சி, டிச. 15-

DCM 48 என்ற தலைப்பில் தமிழக துணை முதல்வர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்டம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது.

மேலும் இதன் ஒரு பகுதியாக திருச்சி தெற்கு மாவட்ட மற்றும் மாநகர வர்த்தக அணி சார்பில் சாதனையாளர் விருது வழங்கும் விழா திருச்சி பால் பண்ணை அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மேலும் விழாவிற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் செந்தமிழ் செல்வன் மற்றும் மாநகர அமைப்பாளர் கே பி கே சரவணன் ஆகியோர் தலைமை வகித்தனர் விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் மாவட்ட வர்த்தக அணி தலைவர் பாலாஜி வரவேற்றார்.

மேலும் இவ் விழாவில் சிறப்பு விருந்தினராக திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு சாதனையாளர்களை கௌரவித்து அவர்களுக்கு விருது வழங்கி விழா பேருரை ஆற்றினார்

மேலும் இந்த விருது வழங்கும் விழாவில் மாநகர செயலாளர் மண்டல குழு தலைவர் மு.மதிவாணன் மாவட்ட துணைச் செயலாளர் செங்குட்டுவன் மற்றும் வர்த்தக அணி மாவட்ட, மாநகர நிர்வாகிகள் , கழக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்

விழாவில் அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உரையாற்றியதாவது

திருச்சி தெற்கு மாவட்டத்தின் சார்பில் தமிழக துணை முதல்வர் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்டத்தின் சார்பில் 48 நிகழ்ச்சிகள் நடத்துவதாக முடிவு செய்யப்பட்டு இன்று 24 வது நிகழ்வாக நமது திருச்சி மாவட்டத்தில் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த 48 சாதனையாளர்களுக்கு திருச்சி தெற்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் விருது வழங்கும் விழா நடைபெற்று வருவதாகவும் மேலும் இவர்களைப் பார்த்து மற்றவர்கள் இளைய சமுதாயத்தினர் சாதனை புரிய வேண்டும் என்பதற்காக இந்த விருந்து வழங்கப்படுவதாகவும் மேலும் உழைப்பால் உயர்ந்தவர்கள் நீங்கள் அனைவரும் என்றும் உங்களால் இன்றைய இளைய சமுதாயத்தினருக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்றும் இந்தியாவிலேயே இரட்டை இலக்கு பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு தான் முதலிடத்தில் உள்ளதாகவும் மேலும் நமது மாநிலம் முதலிடம் ஆக வருவதற்கு காரணம் தமிழக முதல்வர் தான் என்றும் நமது தமிழக முதல்வரின் இலக்கு பொருளாதாரத்தில் 2030 ல் ஒரு ட்ரில்லியன் அகாடமியை தொட வேண்டும் என்ற இலக்கை சாதித்துக் காட்ட வேண்டியவர்கள் நீங்கள்தான் என்றும், மேலும் தற்பொழுது மதுரையில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் தமிழக முதல்வர் அவர்கள் 36 ஆயிரத்து 660 கோடி ரூபாய் முதலீட்டை கொண்டு வந்துள்ளதாகவும் இதனால் 34 லட்சம் இளைஞர்கள் வேலை வய்ப்பு வழங்க வழிவகை செய்து வந்துள்ளதாகவும் இந்தியாவிலேயே அதிக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவதில் முதலிடம் தமிழ்நாடு தான் என்று ரிசர்வ் வங்கியே கூறியுள்ளதாகவும் எனவே நாம் அனைவரும் முதல்வரின் கரத்தை வலுப்படுத்தி இந்தியாவிலேயே தமிழநாட்டின் பொருளாதாரத்தை முதலிடமாக கொண்டு வருவதற்கு பாடுபட வேண்டும் என்றும் மேலும் இன்றைய பிறந்த நாள் விழா நிகழ்ச்சி காணும் தமிழக துணை முதல்வர்கள் பல்லாண்டு வாழ நாம் அனைவரும் வாழ்த்துவோம் என எடுத்துரைத்தார்.

### எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' கூட்டத்தை நடத்துவோம்!

## மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மயிலாடுதுறை டிச 15.

மயிலாடுதுறை மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்ட கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முத்து. மகேந்திரன். இராம். இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து பேசினார்.

கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர் மங்கை எம்.சங்கர், என். இளைய பெருமாள், செல்லசேது. ரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், பி.எம்.அன்பழகன், மூவலூர் எம். மூர்த்தி ஏ.ஆர்.ராஜா,.அப்துல்மாலிக், ப.முருகமணி, ஞான.இமயநாதன், கு. வைத்தியநாதன், அமிர்த. விஜயகுமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர். பஞ்சு.குமார், நகர கழக செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன் பேரூர் செயலாளர்கள் எம். சம்சுதீன், எஸ்.கே. முத்துராஜா, எம்.அன்புச்செழியன், என் .அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

கழகம் 7 வது முறையாகவும், தளபதி இரண்டாவது முறையாகவும் ஆட்சி அமைக்க கழகத் தலைவர் தளபதி அவர்கள் 2026 சட்டமன்ற தேர்தலில் 200க்கும் மேற்பட்ட சட்டமன்ற தொகுதிகளை வெல்வோம் என்ற அறிவிப்பிக்கு இணங்க மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறை பூம்புகார் சீர்காழி வாங்கிய 3 சட்டமன்ற தொகுதிகளையும் கழகம் வென்றிட என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி கூட்டத்தை அந்தந்த வாக்குச்சாவடியில் நடத்திடுவது என்றும். இந்த கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள். சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி பாக முகவர்கள், வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள், கழகத்தினர் அனைவரும் கலந்து கொள்ள செய்து என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி கூட்டம் சிறப்பாக நடத்திட வேண்டும் என்றும் கூட்ட ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் சிறப்பாக செய்து விட வேண்டும் என்றும், கழக நிர்வாகிகள், கழகத்தினர் வீடு வீடாக சென்று கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் தமிழக முதலமைச்சர் மு க ஸ்டாலினை மீண்டும் முதல்வரக்கிட இப்பொழுது இருந்ததே தேர்தல் பணியாற்றியது என்றும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



விளாத்திகுளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 6வது நிதி குழு மானியம்,பள்ளி விளையாட்டு மேம்பாட்டு மானியம் திட்டத்தின் கீழ் ரூ.48லட்சம் கட்டப்பட்டுள்ள கலையரங்க கட்டிடம், சுகாதார வளாகம் கட்டிடங்களை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி.மார்கண்டேயன் திறந்து வைத்தார். நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர் தவசிமுத்து, விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, அன்புராஜன், இம்மானுவேல், செல்வராஜ், மும்மூர்த்தி, வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மகேந்திரன், கழக நிர்வாகிகள் பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.